**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2020**

**P103 இக்காலக் கவிதையும் சிற்றிலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பாரதியின் முப்பெரும் படைப்புகள் யாவை?
2. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இயற்றிய நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. மாடாய் உழைப்பவன் வாழ்க்கையில் பசி வந்திடக் காரணம் என்ன?
4. கண்ணதாசன் இயற்றிய குறுங்காவியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. காட்டு வாத்து – ஆசிரியர் யார்?
6. புண்ணியசாலி எனக் கவிஞர் சிற்பியால் குறிப்பிடப்படுபவர் யார்?
7. பிச்சமூர்த்தி பாடம் கற்ற இயற்கைப்பொருள் எது?
8. சென்னிமலைக் கிளியோபாத்ராக்கள் என்ற நூலின் ஆசிரியர் யார்?
9. புறப்பொருள் சிற்றிலங்கியங்களுக்கு இரு எடுத்துக்காட்டுகள் தருக.
10. பஞ்சகம் என்றால் என்ன?
11. முகவைப் பாட்டு என்றால் என்ன?
12. சரசுவதி மகால் நூலகத்தை நிறுவியவர் யார்?
13. தமிழில் தோன்றிய முதல் தூது நூல் எது?
14. இயசுவின் தாயாகிய மரியாள் எதனுடன் ஒப்புமைப்படுத்தப்படுகிறாள்?
15. தஞ்சைவாணனின் கொடைச்சிறப்பை வெளிப்படுத்தும் உவமை ஒன்றைக் கூறுக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. பாரதிதாசனின் பாடல்களில் வெளிப்படும் தமிழ்த்தேசிய சிந்தனைகள் சிலவற்றைக் கூறுக.
2. கண்ணதாசனின் திரையிசைப் பாடல்களின் தனிச்சிறப்பினைப் பகர்க,
3. தமிழின் பெருமைகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?
4. தீண்டாமைக் கொடுமைகளைச் சாடி கவிஞர் முடியரசன் பாடியனவற்றை இயம்புக.
5. கவிஞர் மஹாகவியின் பெண்ணியச் சிந்தனைகளை கூறுக.
6. திருமால் கோயில் கொண்டுள்ள இடங்களின் சிப்புகள் குறித்து பெரிய திருமடல் கூறுவன யாவை?
7. விக்கிரம சோழனின் கோயில் பணிகளை இயம்புக.
8. அற்புதத் திருவந்தாதியில் இடம்பெற்று உவமை நயத்தினைக் கூறுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பட்டுக்கோட்டையாரின் பாடல்களில் வெளிப்படும் பொதுவுடைமைச் சிந்தனைகளை விளக்கியுரைக்க.

2. (அ) கவிஞர் சிற்பியின் கவிதைகள் வெளிப்படும் புதிய பார்வைகளையும் சமூக அக்கறையையும் மதிப்பிட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) படிமம், தொன்மம், உருவகம் ஆகியவற்றை கவிஞர் அப்துல்ரகுமான் கையாண்டுள்ள பாங்கினை விவரித்துரைக்க.

3. (அ) தமிழ் மொழி குறித்து தமிழ்விடு தூதில் இடம்பெற்றுள்ள செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தக்கயாகப் பரணியில் பயின்று வரும் அணிகள் குறித்து விவரிக்க.

***